**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 71/2015**

**Prosecution witness : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவசுப்பிரமணியம் | Caste | : |
| Father ‘s Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent. PFA)
**09.05.2023**
**முதல் விசாரணை**

நான் மதுரை வடக்கு மாசி வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் கப்பலுர் இண்டஸ்ட்ரியஸ் கெயின்ஸ் இண்டியா பிரைவேட் லிமிடட் என்ற நிறுவனம் நடத்தி வருகிறேன். காம்பலான், நைசில் பவுடர், குளுக்கான் டி, டொமேட்டோ ஆகிய பொருட்களுக்கு தெற்கு தமிழ்நாடு அளவில் நான் ஏஜெண்டாக இருந்தேன். கடந்த 14.0–8.2013 அன்று நான் எனது நிறுவனத்தை பூட்டி விட்டு சென்றுவிட்டேன் . மறுநாள் சுதந்திர தினம் என்பதால் எனது நிறுவனத்திற்கு விடுமுறையாகும். மறுநாள் 16.08.2013 அன்று எனது நிறுவனத்தின் மேலாளர் ராஜமாணிக்கம் காலை 9 – 10 மணியளவில் நிறுவனத்தை திறந்த போது ஏற்கனவே நாங்கள் வைத்திருந்த ஸ்டாக்கில் 17 பாக்ஸ் குறைவாக இருந்தது. ஒரு பாக்ஸ் என்பது 30 யூனிட் அளவாகும். ஒரு யூனிட் என்பது 1 /2 காம்ப்ளான் பேக் ஆகும். அதை பார்த்துவிட்டு ராஜமாணிக்கம் எனக்கு போன் செய்தார். நான் இரவு வாட்ச்மேன் பணி செய்த போது நானும் எனது நிறுவனத்திற்கு சென்றேன். நாங்கள் பார்க்கும் போது மேற்கண்ட பொருட்கள் குறைந்து இருந்தது. மேற்கண்ட பொருட்களின் மதிப்பு அப்போதைய மதிப்பு சுமார் 1 லட்சம் ஆகும். நான் எனது நிறுவனத்தில் பணிசெய்தவர்களை விசாரித்தேன். எங்கள் நிறுவனத்திற்கு எதிர் புறத்தில் டீக்கடைகள் இருந்தது. டீக்கடை வைத்தவர்களை விசாரித்த போது அவர் பெயர் தற்போது நினைவு இல்லை. மதியம்நேரத்தில் என்னிடம் வேலை செய்த நபர் அந்த இடத்தில் சுற்றிக் கொண்டு தான் இருந்தார்கள் என கூறினார்கள். அதை வைத்து நான் அவர்களை விசாரித்த போது அவர்கள் தெரியாது என்று கூறினார்கள். பின்பு நான் காவல் நிலையம் சென்று சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆகும். புகார் கொடுத்து 4 – 5 நாட்கள் கழித்து காணாமல் என்னுடைய காம்ப்ளான் பாக்கெட்டுகளை நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக் கொண்டேன். என்னிடம்

காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள பொருட்கள் தான் காணாமல் போன பொருட்களாகும். மேற்படி புகைப்படம் சா.பொ.ஆ.1 முதல் 3 வரை ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

திருடிய பொருட்களை அவனியாபுரத்தில் உள்ள 4, 5 கடைகளில் கொடுத்ததாக சொன்னார்கள். அவனியாபுரத்தில் 5 கடைகளில் கைப்பற்றிய காம்ப்ளான் பெட்டிகளும் என்னிடம் காணாமல் போன காம்ப்ளான் பெட்டிகளும் ஒன்று தான் என்பதை நான் பேச் நம்பர் மூலம் தெரிந்து கொண்டேன். நாங்கள் கொடுத்த பில்லில் உள்ள பேச் நம்பர்களும் போலிசார் எனக்கு அடையாளம் காட்டிய பேச் நம்பர்களும் ஒன்றாக இருந்தது. நான் காவல் நிலையம் போன போது அந்த அவனியாபுரம் கடைக்காரர்களை பார்க்கவில்லை. எதிரிகள் மேற்படி கடைகளில் கொடுத்து இருப்பதாக சொன்னதின் பேரில் பொருட்களை கைப்பற்றியதாக போலிசார் என்னிடம் சொன்னார்கள். 17 பெட்டிகளில் இரண்டு, மூன்று பெட்டிகளில் ஒன்று இரண்டு பாக்கெட் குறைவாக இருந்தது. ஆனால் போலிசார் என்னிடம் முழுமையாக 17 பெட்டிகளையும் என்னிடம் ஒப்படைத்து விட்டார்கள். என்னை இரண்டு, மூன்று முறை விசாரித்தார்கள். நான் மூன்று, நான்கு முறை விசாரணைக்கு போகும் போது இறுதியாக என்னிடம் பெட்டிகளை காட்டினார்கள். இறுதியான விசாரணையின் போது தான் எனக்கு பெட்டிகளை காட்டினார்கள். அப்போது ஒரு சில பெட்டிகளில் பாக்கெட்டுகள் குறைவாக இருக்கிறது என்று நான் போலிசாரிடம் சொன்னேன். அதன் பிறகு 17 பெட்டிகளையும் நிரப்பிய பின்னர் என்னை நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளுமாறு சொன்னார்கள். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் கொடுத்தது யாரோ தெரியாத நபர்கள் தான் திருடி விட்டதாக புகார் கொடுத்தேன். என்னிடம் வேலை பார்த்தவர்களை நான் பெயர் சொல்லி புகார் எதுவும் தரவில்லை. நான் முதலில் வாய் மொழியாக போலிசாரிடம் சொன்னேன். டீக்கடைக்காரர் சொன்னதையும் நான் வாய்மொழியாக சொன்னேன். உடனே போலிசாரும் என்னுடைய குடோனுக்கு வந்து விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணை செய்து இன்னார் தான் என்று சொன்னார்கள். அதன் பிறகு புகாரை எழுதி தரச் சொன்னார்கள். எழுதிக் கொடுத்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட புகாரை நான் எழுதிவில்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 71/2015**

**Prosecution witness : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜமாணிக்கம் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent. PFA)

**09.05.2023**

**முதல் விசாரணை**

நான் தனக்கன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கப்பலுர் இண்டஸ்ட்ரியஸ் கெயின்ஸ் இண்டியா பிரைவேட் லிமிடட் என்ற நிறுவனத்தில் டெஸ்பேச் இன்சார்ஜ் ஆக பணியாற்றி வருகிறேன்.அ.சா.1 மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார். கடந்த 14.08.2013 அன்று மாலை அலுவலகத்தை மூடுவதற்கு முன்பு உள்ளே இருந்த பொருட்கள் அனைத்தையும் சரிபார்த்து வைத்தோம். மேற்படி எங்கள் நிறுவனமானது காம்ப்ளான் நிறுவனத்திற்கு தெற்கு தமிழ்நாடு அளவில் ஸ்டாக்கிஸ்டாக இருந்தோம். மறுநாள் சுதந்திர தினம் என்பதால் எனது நிறுவனத்திற்கு விடுமுறையாகும். மறுநாள் 16.08.2013 அன்று எங்களது நிறுவனத்தில் காலை 9 – 10 மணியளவில் நான் வந்து அலுவலகத்தை திறந்த போது ஏற்கனவே நாங்கள் வைத்திருந்த ஸ்டாக்கில் 17 பாக்ஸ் குறைவாக இருந்தது. ஒரு பாக்ஸ் என்பது 30 யூனிட் அளவாகும். ஒரு யூனிட் என்பது 1 /2 காம்ப்ளான் பேக் ஆகும். அதை பார்த்துவிட்டு நான் அ.சா.1 க்கு போன் செய்து தகவல் கூறினேன். அ.சா.1 அலுவலகத்திற்கு வந்து பார்த்தார். அதன் பின்பு காவல் நிலையம் வந்து அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் வந்து எங்கள் நிறுவனத்திற்கு வந்து பணி செய்த அனைவரையும் விசாரித்தார்கள். எங்கள் நிறுவனத்தில் பணி செய்த வாசு, காளி, திருஞானம் மற்றொரு நபர் பெயர் நினைவு இல்லை, ஆகிய நபர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டது. 4 – 5 நாட்கள் கழித்து காணாமல் காம்ப்ளான் பாக்கெட்டுகளை அ.சா.1 நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக் கொண்டோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் அ.சா.1 டன் காவல் நிலையம் போனேன். ஆனால் நிலையத்திற்குள் செல்லவில்லை. நாங்கள் அப்போது புகார் தரவில்லை. போலிசாரை மட்டும் அழைத்து சென்றோம். 3 போலிசார் வந்தார்கள். எப்படி பொருள் களவாடப்பட்டது என்று எனக்கு தெரியாது. ஸ்டாக்கில் மட்டும் குறைவாக இருந்தது. தினசரி

கணக்குகளை சரிபார்ப்போம். 15 ம் தேதி விடுமுறை என்பதால் 16 ம் தேதி வந்து பார்த்தோம். போலிசார் ஒருமணி நேரம் அங்கு இருந்தார்கள். என்ன விசாரணை செய்தார்கள் என்பது எனக்கு தெரியாது. எங்களை வெளியே இருக்கச் சொல்லிவிட்டு போலிசாரும், அ.சா.1 ம் அலுவலகத்தில் இருந்தார்கள். அப்போது எங்களை போலிசார் எதுவும் கேட்கவில்லை. போலிசார் விசாரணை முடித்து சென்ற பிறகு எங்களை விசாரிக்கவில்லை. அதன் பின்பு நான் காவல் நிலையம் செல்லவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. அ.சா.1 சொல்வதை வைத்து நான் சொல்கிறேன். போலிசார் விசாரணை செய்து சென்ற பிறகு 3 தினங்கள் கழித்து புகாரை கொடுக்கச் சொன்னார்கள். அ.சா.1 சென்று புகார் கொடுத்தார்.